**ஆகஸ்ட் – 11**

# TNPSC துளிகள்

- ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கணிதம் சார்ந்த கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக நிகழ்நேரத்தில் (ஆன்லைன்) தரவுகளை வழங்குவதில் கவனம் செலுத்தக் கூடிய ஒரு முன்னோடித் திட்டமான "மேட்டிபிக்" என்ற செயலியை தமிழ்நாடு மாநில கல்வித் துறை தொடங்கியுள்ளது.
  - "மேட்டிபிக்" ஆனது மாணவர்களின் கணிதம் சார்ந்த கற்றல் திறனின் முழுமையான வளர்ச்சிக்குப் பங்களிக்கக் கூடிய வகையில் கணக்குகளுக்குத் தீர்வு காணும் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துகின்றது.
- காதி மற்றும் காதி தொழிற்துறை ஆணையம் (KVIC - Khadi and Village Industry Commission) 2019 ஆம் ஆண்டின் உலக பூர்வகுடி மக்கள் தினத்தின்போது (ஆகஸ்ட் 9) "தோல் திட்டம்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது. இது இந்தியா முழுவதும் தோல் கைவினைஞர்களுக்குத் தோல் சார்ந்த பொருட்களை வழங்கவிருக்கின்றது.
- இந்திய தேசிய அறிவியல் நிறுவனத்தின் முதலாவது பெண் தலைவராக சந்திரிமா சஹா பொறுப்பேற்கவுள்ளார். இவருடைய பதவிக் காலம் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கவிருக்கின்றது.
  - இவர் இதற்கு முன்பு புது தில்லியில் உள்ள தேசிய நோய் தடுப்பியல் நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.
- இந்தியாவின் முதலாவது "சுகாதாரப் பற்று அட்டையானது" தனியார் துறை வங்கியான ஆர்பிஎல் மற்றும் டிஜிட்டல் சுகாதார நல பிராக்டோ தளம் ஆகிய நிறுவனங்களினால் தொடங்கப்பட்டுள்ளது. மருத்துவர்களுடனான நிகழ்நேர ஆலோசனைகள் மற்றும் இலவச சுகாதாரப் பரிசோதனை போன்றவற்றிற்காக இதைப் பயன்படுத்த முடியும்.
- ஹைதராபாத் ஓபன் போட்டியில் இந்திய பேட்மின்டன் வீரரான சவ்ரப் வெர்மா ஆண்களுக்கான ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார். இவர் இறுதிப் போட்டியில் சிங்கப்பூரைச் சேர்ந்த லோஹ் கியான் யூவை வீழ்த்தினார்.
- ஜார்ஜியாவின் திபிலீசியில் நடைபெற்ற கிராண்ட் பிரிக்ஸ் மல்யுத்தத் தொடரில் பஜ்ரங் புனியா 65 கிலோ எடைப் பிரிவில் ஈரானின் பெய்மன் பிப்யானி என்பவரை வீழ்த்தி, தனது நான்காவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## குழந்தைகளைப் பேணுவதற்கான விடுப்பு – ஆண் இராணுவ வீரர்கள்

- ஆண் இராணுவ வீரர்களுக்கு குழந்தைகளைப் பேணுவதற்காக விடுப்பு (Child Care Leave - CCL) எடுப்பதின் பயன்களை நீட்டிப்பதற்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒப்புதல் வழங்கியுள்ளார். மேலும் பாதுகாப்புப் படையில் பெண் அதிகாரிகள் இருக்கும் பட்சத்தில் CCL விதிமுறைகளில் ஒரு சிலவற்றைத் தளர்த்துவதற்கும் அவர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- தற்பொழுது CCL ஆனது பாதுகாப்புப் படையில் உள்ள பெண் அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கப் படுகின்றது.
- ஒரு குழந்தை 40 சதவிகிதம் மாற்றுத் திறனுடையதாக இருந்தால் CCLஐப் பெற முடியும். அந்தக் குழந்தையின் வயது வரம்பில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் CCLஐப் பெற முடியும்.

## 66-வது தேசியத் திரைப்பட விருதுகள்

- 2018 ஆம் ஆண்டிற்கான 66-வது தேசியத் திரைப்பட விருதுகளானது (NFA - National Film Awards) மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு அமைப்பான திரைப்படத் திருவிழாக்கள் இயக்குநரகத்தால் (Directorate of Film Festivals - DFF) அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த விருதுகளுக்கான தேர்வானது DFFயினால் நியமிக்கப்பட்ட புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் திரைப்பட வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழுவினால் மேற்கொள்ளப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின வெற்றியாளர்கள் பின்வருமாறு:
  - சிறந்த திரைப்படத்திற்கான விருது : குஜராத்தி மொழித் திரைப்படமான ஹெலாரோ
  - சமூகப் பிரச்சினைகளைப் பேசும் சிறந்த திரைப்படம் : இந்தி மொழித் திரைப்படமான பத்மன்
  - சிறந்த இயக்குநருக்கான விருது : உரி - ஒரு துல்லியத் தாக்குதல் என்ற திரைப்படத்தின் இயக்குநர் ஆதித்யா தார்.
  - சிறந்த நடிகருக்கான விருது : அந்தாதூன் மற்றும் உரி - துல்லியத் தாக்குதல் ஆகிய திரைப்படங்களில் சிறப்பாக நடித்ததற்காக ஆயுஷ்மான் குரானா மற்றும் விக்கி கௌசல் ஆகியோருக்குக் கூட்டாக வழங்கப்பட்டது.
  - சிறந்த நடிகைக்கான விருது : தெலுங்குத் திரைப்படமான மகாநதியில் சிறப்பாக நடித்ததற்காக கீர்த்தி சுரேஷிற்கு வழங்கப்படுகின்றது.
  - சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த திரைப்படம் : மராத்தி மொழித் திரைப்படமான பானி
  - தேசிய ஒருங்கிணைப்பு குறித்த சிறந்த திரைப்படப்பத்திற்கான நர்கிஸ் தத் விருது : கன்னட மொழித் திரைப்படமான ஒண்டாலா எர்டாலா
  - திரைப்படத்திற்கு மிகவும் உகந்த சூழலைக் கொண்ட மாநிலம் : உத்தரகாண்ட்



# சர்வதேசச் செய்திகள்

## கஜின் சாரா ஏரி

- நேபாளத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கஜின் சாரா ஏரியானது உலகின் உயரமான ஏரி என்ற ஒரு புதிய சாதனையைப் படைக்க விருக்கின்றது.
- இது நேபாளத்தின் மானாங் மாவட்டத்தில் உள்ள சிங்கர்கர்ஹாவில் அமைந்துள்ளது.
- தற்பொழுது உலகின் உயரமான ஏரி என்ற சாதனையை டிலிச்சோ ஏரி வைத்துள்ளது. இது நேபாளத்தில் 4919 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- 1.5 கிலோ மீட்டர் தொலைவும் 600 மீட்டர் அகலமும் கொண்ட கஜின் சாரா ஏரி 5200 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரி இன்னமும் அதிகாரப் பூர்வமாக சரி பார்க்கப் படவில்லை.

## மீண்டும் பயன்படுத்தக்கூடிய (மறுபயன்பாடு கொண்ட) ஏவு வாகனங்கள்

- சீனாவின் புதிய நிறுவனமான லிங்க்ஸ்பேஸ் நிறுவனம் RLV – 75 என்ற ஒரு மறுபயன்பாடு கொண்ட ஏவு வாகனத்தின் (ராக்கெட்) சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- விண்வெளி ஆய்வு மற்றும் விண்வெளிப் பயன்பாடு ஆகியவற்றின் மிகப்பெரிய தடுப்பாக விண்வெளியை அணுகுவதற்கான செலவு உள்ளது.
- மறுபயன்பாடு கொண்ட ஏவு வாகனம் என்பது குறைந்த செலவு, நம்பத் தகுந்த மற்றும் தேவைக்கேற்ப விண்வெளியை அணுகுதல் ஆகியவற்றை அடைவதற்கான ஒரு ஒருமித்த தீர்வாகும்.
- இதேபோன்ற தொழில்நுட்பத்தில் அமெரிக்காவின் ஸ்பேஸ்எக்ஸ், சீனாவின் ஐஸ்பேஸ் ஆகிய இதர தனியார் நிறுவனங்கள் பங்கு பெற்றுள்ளன.
- இஸ்ரோவின் மறுபயன்பாடு கொண்ட ஏவு வாகனம் - தொழில்நுட்பச் செயல்விளக்கத் திட்டமும் இது போன்ற ஒரு தொழில்நுட்பத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயிலிருந்து உயிரி-எரிபொருள்

- உலக உயிரி-எரிபொருள் தினக் கொண்டாட்டத்தின்போது (ஆகஸ்ட் 10), மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகம் பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயிலிருந்து (UCO - Used Cooking Oil) தயாரிக்கப்பட்ட உயிரி-டீசலை (பயோடீசல்) வாங்குவதற்காக தேசிய எண்ணெய் சந்தையிடல் நிறுவனங்களினால் (IOC, HPCL and BPCL) தயாரிக்கப்பட்ட "ஆர்வத்திற்கான வெளிப்பாடு" என்ற ஒரு ஆவணத்தை வெளியிட்டுள்ளது.




- UCO-யின் சேகரிப்பை மேற்கொள்ளுவதற்காக மறுபயன்பாடு கொண்ட பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் மீதான ஒட்டுப்படம் (ஸ்டிக்கர்) ஒன்றும் கைபேசிச் செயலி ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் நாடு முழுவதும் 100 நகரங்களில் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றது.
- ஒரு நாளைக்கு 50 லிட்டருக்கும் மேல் எண்ணெயைப் பயன்படுத்தும் உணவு வணிக நிறுவனங்கள் மூன்று முறைக்கு மேல் அந்த எண்ணெயை மீண்டும் பயன்படுத்தக் கூடாது என்று இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் (Food Safety and Standards Authority of India's - FSSAI) சமீபத்தில் அந்நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளது.

## இரும்பு அயனி மின்கலன்கள் – IIT M

- மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக மென் எஃகை நேர்மின்முனையாகப் பயன்படுத்தும் ஒரு மீள்நிரப்பு இரும்பு அயனி ($Fe^{2+}$ அயனிகள்) மின்கலனை உருவாக்கியுள்ளனர்.
- இந்த இரும்பு அயனி மின்கலன் குறைந்த செலவு கொண்டது. இந்த மின்கலனில் சேமிக்கப்படும் ஆற்றலின் அளவும் அதிகமாகும்.
- அதிக அளவிலான மின்சார வாகனங்களை உற்பத்தி செய்வதற்கு, லித்தியம் அயனி மின்கலன்களைத் தயாரிக்க வேண்டும்.
- ஆனால் இந்தியாவில் லித்தியம் வளங்கள் இல்லை. சர்வதேச அளவில் லித்தியம் வளங்கள் பற்றாக் குறையாக இருக்கின்றது.
- எனவே, லித்தியம் போன்ற சாதகமான இயற்பியல்-வேதியியல் பண்புகளைக் கொண்ட இரும்பை மீள்நிரப்பு மின்கலன்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீர்ப்பாசனம் மற்றும் மாறிவரும் மழைப் பொழிவு அமைப்புகள்

- முதன்முறையாக, பம்பாயில் உள்ள இந்தியத் தொழில்நுட்பத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நீர்ப்பாசனக் கொள்கையில் ஏற்படும் மாற்றமானது பின்வருவனவற்றை ஏற்படுத்தும் என்பதைக் கண்டறிந்துள்ளனர்.
  - பருவமழையை வடமேற்கு இந்தியாவிற்கு மாற்றும் திறன்.
  - மத்திய இந்தியாவில் மிகக் கடுமையான மழைப் பொழிவை ஏற்படுத்துதல்.

***இது எவ்வாறு செயலாற்றுகின்றது?***

- செப்டம்பர் மாதத்தின்போது, விவசாய நிலங்கள் அதிக நீர்ப்பாசனம் பெற்று, பயிர்கள் முதிர்ச்சியடைந்தவையாக விளங்குகின்றன.
- இதன் விளைவாக மிக அதிக அளவிலான நீராவிப் போக்கு ஏற்படுகின்றது. இதன் மூலம் நிலத்திலிருந்து வளிமண்டலத்திற்கு மாறும் ஈரப்பதத்தின் பங்களிப்பு அதிகமாக இருக்கும்.
- ஈரப்பத அதிகரிப்பின் விளைவாக, பருவமழை அமைப்பு மற்றும் அதன் தீவிரத் தன்மை அதிகரிக்கின்றது.
- இந்த ஆய்வானது நில - மேற்பரப்பு மாதிரியை, குறிப்பாக இந்திய நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அமைப்பை கணக்கில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வு தென் இந்தியாவை உள்ளடக்கவில்லை.

# மாநிலச் செய்திகள்

## திவிப்ரா தேசிய விடுதலை முன்னணி – திரிபுரா

- இந்திய அரசு, திரிபுரா மாநில அரசு மற்றும் திரிபுராவில் தடை செய்யப்பட்ட கிளர்ச்சிக் குழுவான சமீர் குமார் தேவ் வர்மா தலைமையிலான திவிப்ரா தேசிய விடுதலை முன்னணி (National Liberation Front of Twipra - NLFT-SD) ஆகியவற்றிற்கிடையே அமைதி ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின்படி NLFT-SD ஆனது வன்முறையைக் கைவிட்டு தேசிய

நீரோட்டத்தில் இணைவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது.

- NLFT ஆனது 1997 ஆம் ஆண்டு முதல் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் வடகிழக்கில் சரணடைந்த "கிளர்ச்சியாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம், 2018"ன் படி சரணடைந்த கிளர்ச்சியாளர்களுக்கு சரணடைந்ததற்கான பயன்கள் வழங்கப் படவிருக்கின்றன.

# விளையாட்டுச் செய்திகள்

## BCCI – தேசிய போதை மருந்து எதிர்ப்பு நிறுவனம்

- இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமானது (Board of Control for Cricket in India - BCCI) தேசிய போதை மருந்து எதிர்ப்பு நிறுவனத்தின் (NADA - National Anti-Doping Agency) வரம்புக்குள் வர ஒப்புக் கொண்டுள்ளது.
- தற்பொழுது வரை, ஸ்வீடனில் அமைந்துள்ள சர்வதேச போதை மருந்து பரிசோதனை மேலாண்மை அமைப்பு (IDTM - International Dope Testing Management) BCCIன் சார்பாக கிரிக்கெட் வீரர்களின் மாதிரிகளைச் சேகரித்து அவற்றைத் தேசிய போதை மருந்து பரிசோதனை ஆய்வகத்திடம் சமர்ப்பிக்கின்றது.
- தற்பொழுது NADA ஆனது உள்ளூர் விளையாட்டுத் தொடர்கள், இருநாட்டு விளையாட்டுப் போட்டிகள், இந்தியப் பிரீமியர் லீக் தொடர் ஆகியவற்றின் போது அனைத்து கிரிக்கெட் வீரர்களின் மாதிரிகளையும் சேகரிக்கவிருக்கின்றது.

*இது பற்றி*

- NADA ஆனது 1890 ஆம் ஆண்டின் சமூகப் பதிவுகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சமூதாய அமைப்பாக போதைப் பொருள் அற்ற விளையாட்டுகளை இந்தியாவில் நடத்தும் நோக்கத்துடன் 2005 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது இந்தியாவில் உள்ள அனைத்து வகையான விளையாட்டுகளிலும் போதை மருந்து கட்டுப்பாட்டுத் திட்டத்தை மேம்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது.

# இதரச் செய்திகள்

## LAFA போட்டி

- லாஸ் ஏஞ்சல்ஸ் திரைப்பட விருதுகள் (LAFA - Los Angeles Film Awards) வழங்கும் நிகழ்ச்சியில் திருப்பூரின் அங்கேரிபாளையத்தைச் சேர்ந்த K. மகாஸ்வேதா என்பவர் "யாரோடு பறையும்" (நான் யாரிடம் சொல்வது?) என்ற ஒரு மலையாளக் குறும்படத்தில் தன்னுடைய கதாபாத்திரத்திற்காக சிறந்த குழந்தை நடிகர் விருதை வென்றுள்ளார்.
    - LAFA என்பது உலகம் முழுவதும் உள்ள திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கான ஒரு மாதாந்திரத் திரைப்பட மற்றும் திரைக்கதைப் போட்டியாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★